மொத்த அமைப்புமே இயங்காத நிலை ஏற்படக் கூடும். அவைகள் மிகவும் மெல்லிய கருவிகளாகத் தயாரிக்கப்பட்டுள்ள தால் சரியான முறையில் அவைகளை நாம் வைத்திருத்தல் இன்றி யமையாதது. மேலும் ஒரே மாதிரியான மைக்குகள் கிடைப்பதும் கிடையாது.

எனவே உறுப்பினர்கள் தயவுசெய்து ஒலிபெருக்கியினை ஆதாரமாகக் கொண்டு எழுந்திருப்பதையும், அவைகளை உபயோகிக்காத நேரங்களில் திருகிக் கொண்டிருப்பதையும் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) 4 ஒலி பெருக்கிகள் உடைந்தாயிற்று. நான் யாரையுமே தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்லவில்லை. இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். இன்றைக்குத்தான் முதல்வர் பேசுகிறார், ஆகவே எல்லோரும் இருப்பார்கள். ஆகவே, சொல்லிவிட வேண்டுமென்று சொன்னேன். தனிப்பட்ட முறையிலே யாரையும் சொல்ல வில்லை. இது பொது அறிவிப்புதான். நீங்கள் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

2 தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஈ) உறுப்பினர்கள் விடுதியிலுள்ள தொலைபேசி சரிவர இயங்காமை.

திரு. ரா. உமாநாத்: டெலிபோன் விஷயமாக ரெய்ஸ் பண்ணியபொழுது இந்த பொது அறிவிப்பு வந்திருக்கிறது. நாம் எப்படி நடக்க வேண்டுமென்பதுமட்டும்தான் நான் என்ன சொல்கிறேன் என்றால், We are spending lakhs of rupees on telephones, but we have no control over the Telephone Department.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டெலிபோன் இல்லை, ஒலிபெருக்கி. நான் சொல்வது லவுட்ஸ்பீக்கர். நீங்கள் சொல்வதோ வேறு சப்ஜக்ட். டெலிபோன விஷயமாக நேற்றே சொல்லிவிட்டார்கள். ஸ்டீபனிடமே சொல்லலாம் என்று சொன்னார்கள்.

THIRU R. UMANATH: We are paying so many lakhs of rupees to the Telephone Department. They are not doing free service. பே பண்ணுகிறபொழுது, அதற்குத் தகுந்தாற்போல குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்க வேண்டாமா அவர்கள். அங்கே நாம் டெலிபோன் யூஸ் பண்ணாமல், வெளி டெலிபோனை யூஸ் பண்ணுகிறோம் என்று சொன்னால், அது வேறு. அங்கே, ஹாஸ்டலிலே, 'டெட்' ஆகவே இருக்கிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், டிபார்ட்மென்ட்டை 'ஹால்' செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றே டெலிபோன் டிபார்ட்மெண்டுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். மாதக் கணக்கில் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஒவ்வாரு தடவையும் 6 டெலிபோன்கள் ஒட்டு மொத்தமாகக் கெட்டுப் போகிறது என்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: நேற்று ஈவினிங் எல்லா டெலிபோன் களும் 'டெட்'. ஒன்று கூட வேலை செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று ஈவினங் கெட்டி ருந்தால் கெட்டிருக்கும். ஏனென்றால், நேற்று காலையிலே உங்களுக்கு டிரங்க் கால் வந்தது என்று சபையிலே சொல்லி யிருக்கிறீர்கள். ஆகவே, ஈவினிங்தான் கெட்டுப் போயிருக்க வேண்டும். காலையிலே சரியாகத்தான் வேலை செய்திருக்கிறது.

திரு. ரா. உமாநாத்: அங்கத்தினர்களுக்கு இன்கம்மிங் கால் வருகிறது. அது வேறு, ஆனால், உங்களைக் கான்டாக்ட் செய்ய வேண்டும், அல்லது மினிஸ்டர்ளை கான்டாக்ட் செய்ய வேண்டும் அவசரமாக என்றால், எங்களால் முடியவில்லை.

'We are unable to call even the exchange., We are paying them. Should they not give us service? அந்தத் துறைக்கு நாம் பணம் கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் செய்த அறிவிப்பைப் பொறுத்தவரை, தனித்தனியாகச் சொன்னதை அறிவிப்பாகக் கொடுக்க வேண்டியதாகப் போயிற்று. டெலிபோனைப் பொறுத்தவரையில் திரு. ஸ்டீபனாலேயே முடியவில்லை.

THIRU R. UMANATH: When we pay money, we must get service.

திரு. என். எஸ். வி. சித்தன்: சார், ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர். நேற்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே தொலைபேசி பேசவில்லையென்று நான் சொன்ன விஷயத்திலே, அது எப்படியோ, தொலைபேசிஇலாகா பணியாற்ற முடியவில்லை, பணியாற்றவில்லை என்பதைப் போல இங்கே, மாறிமாறி சொல்லப்படுகிறது. நான் சொல்வதெல்லாம், நம்முடைய விடுதிக்குள்ளே இருக்கின்ற தொலைபேசி இயந்திரம் அதன் தகுதிக்கு மேலே இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதால் சரியாகச் செயல்படவில்லை. ஆனால் இங்கே வழக்கம்போல திசை திருப்பிச் சொல்லப்படுகிறது. ஒன்று அந்த இயந்திரத்தைப் பெரிதாக வைக்க வேண்டும் அல்லது இணைப்புகளைப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

1983 பிப்ரவரி 21

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் டெக்னிக்கலாகச் சொல்கிறார்கள். டெக்னிகல் டிஃபெக்ட் இருக்கிறதா என்று நான் விசாரிக்கிறேன். நான் இந்தியா பூராவும டெலிபோனைப் பயன்படுத்தியிருக்கிறேன். எனக்கு டெலிபோனைப் பற்றித் தெரியும் என்பதால்தான் நான் சொல்கிறேன். பர்சனலாக அதுபற்றித் தெரியும். நானும், திரு. உமாநாத் அவர்களும் பார்லிமெண்டிலே இருந்திருக்கிறோம். அங்கேயும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

திரு. ரா. உமாநாத்: இதில் கட்சிப் பிரச்னை எதுவும் கிடையாது; எல்லோரும் அவதிக்கு ஆளாகிறோம். அதனால் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இதுகுறித்து நானே பொறுப் பேற்று டிஸ்டிரிக்ட் மேனேஜரோடு பேசுகிறேன்.

4. கவன ஈர்ப்புகள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு.ஜே.ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வழங்கப்படாததால் அவர்களிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு அளிக்கப்படும் கடன் உதவி அரசால் நிதி ஆண்டு 1981-82-ல் ரூ.6 கோடியும் 1982-83ல் ரூ. 7 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் மிகவும் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தால் 5-8-81 வரை பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை முற்றிலும் ஒப்புதல் அளிக்கும் வகையில் மேலும் புதிய விண்ணப்பங்கள் பெற வேண்டாம் என்று அரசு ஆணை இட்டிருந்தது. இந்த விண்ணப்பங்களின் மீது மாவட்டங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வுசெய்து, விண்ணப்பங்களின் தேக்கநிலை